குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.128/2020

அ.சா.5

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி | தொழில் | |
| கணவர் பெயர் | தனசேகரன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 02.12 மணி,

Accused A2.Manikandan present. A1.Chinnapaiyan S/o.Arumugam died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் வ.உ.சி நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, இரவு சுமார் 02.00 மணியளவில் கலைச்செல்வியின் வீட்டில் இருந்து செயினை பறித்து விட்டார்கள் என்று சத்தம் கேட்டது. நாங்கள் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தோம். செயினை பறித்த நபர் ஓடிவிட்டதாக சொன்னார்கள்.

2. சுமார் 1/2 மணிநேரம் கழித்து போலிசார் வந்தார்கள். அதன்பின்பு மறுநாள் காலை போலிசார் வந்தார்கள். அதன்பின்பு கலைச்செல்வியின் வீட்டில் விசாரணை செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி கையெழுத்தை போலிசார் கலைச்செல்வியின் வீட்டருக சம்பவம் நடந்த மறுநாள் மதியம் என்னிடம் வாங்கினார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் படிக்கவில்லை. அ.சா.1 சொல்லிதான் எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் சரி. போலிசார் என்னிடம் கையெழுத்து

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:59 +0530

பெற்றுச்சென்ற தாளில் உள்ள விபரங்கள் முழுவதுமாக எனக்கு தெரியாது என்றால் சரி. வெள்ளை தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எழுதிய தாளில் தான் கையெழுத்து செய்தேன். அ.சா. 1 எனது பக்கத்து வீட்டிக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் கையெழுத்து பெற்றபோது இரண்டு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.17 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:03:03 +0530